# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO I, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.48/2025 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw2 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : திரு.K.ஜோதிராஜ்(சிறப்பு சார்பு ஆய்வாளர்) |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 மனுவானது இணையவழியாக பதிவேற்றம் செய்யப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

21.05.2026

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது ஏழாயிரம்பண்ணை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கினை பதிவு செய்து முதல் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் திரு.ஹரிராம் மற்றும் இவ்வழக்கை மேல் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் திரு.சங்கர் ஆகியோர்களை தெரியும். அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 23.08.2024 ம் தேதி 11.00 மணிக்கு வெம்பக்கோட்டை வட்ட காவல் நிலைய ஆய்வாளர் உத்தரவின் பேரில் ஏழாயிரம்பண்ணை சார்பு ஆய்வாளர் திரு.ஹரிராம் அவர்களுக்கு உதவியாக சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.காளிராஜ், முதல்நிலை காவலர் 3861 திரு.மாரிமுத்து என்பவரும் கள்ள வெடி, கள்ள திரி குற்ற தடுப்பு சம்மந்தமாக ஏழாயிரம்பண்ணை சரகம்,

புல்லக்கவுண்டன்பட்டி, இந்திரா காலனியில் ரோந்து சுற்றி கண்காணித்து வரும் போது இந்திரா காலனி மேற்கு பக்கம் அசோக்குமார் என்பவருக்கு சொந்தமான பழைய மாட்டு பண்ணையில் கள்ள வெடி தயாரித்தது சம்மந்தமாக சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 11.30 மணிக்கு மேற்படி போலீஸ் பார்ட்டி சகிதம் அந்த இடத்திற்கு சென்று பார்க்க அங்கு பேன்சி ரக வெடி தயாரித்து குழாயில் திரி வைத்து கொண்டிருந்தவர்கள் போலீஸ் பார்ட்டியை கண்டதும் ஓட எத்தணித்தவர்களை பிடித்து விசாரிக்க 4/59, கிழக்கு தெரு, காளிப்பன் மகன் அசோக்குமார், வயது 42 என்பவர் கள்ள வெடி தயாரிப்பதை ஒப்புக் கொண்டுள்ளார், அரசு அனுமதியில்லாமல் பேன்சி ரக கள்ள வெடி தயாரித்தால் மனித உயிருக்கு ஆபத்து ஏற்படும் என தெரிந்திருந்தும், தயாரித்த குற்றத்திற்காக மேற்படி நபரை சார்பு ஆய்வாளர் கைது செய்து மருந்து அடைக்காத திரி வைக்கப்பட்ட பேன்சி ரக இன்னர் குழாய் சில்கள் அடங்கிய சாக்கு பை ஒன்று, கம்பியூட்டர் திரி மூன்று கட்டும், திரி வெட்ட பயன்படும் கத்தி ஒன்று, 5 கிலோ வெடி உப்புகள் ஆகியவற்றை அத்தாட்சியில் பேரில் கைப்பற்றியுள்ளார், அந்த அத்தாட்சியில் வெளி நபர்கள் யாரும் கையொப்பமிட முன்வாராதால் போலீஸ் பார்ட்டியாகிய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.காளிராஜ், முதல்நிலை காவலர் திரு. மாரிமுத்து என்பவரும் கையொப்பம் செய்துள்ளார்கள். பின்னர் எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து சார்பு ஆய்வாளர் காவல் நிலைய குற்ற எண்.107/2024, பிரிவு – 9(B)(1)(a) IE Act ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கையானது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு கைது செய்த எதிரி அசோக்குமார் என்பவரை தக்க வழி காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்பு இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட சார்பு ஆய்வாளர் திரு.ஹரிராம் 23.08.2024ம் தேதி 14.15 மணிக்கு சாட்சிகள் தர்மர், பாண்டி ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.காளிராஜ், முதல்நிலை காவலர் திரு.மாரிமுத்து மற்றும் தர்மர், பாண்டி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட வட்ட காவல் ஆய்வாளர் திரு.சங்கர் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலமாக நீதிமன்றம்

அனுப்பி வைத்துள்ளார். படிவம் 91 அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யபப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களான **மருந்து அடைக்காத திரி வைக்கப்பட்ட பேன்சி ரக இன்னர் குழாய் சில்கள் அடங்கிய சாக்கு பை ஒன்று, கம்பியூட்டர் திரி மூன்று கட்டும், திரி வெட்ட பயன்படும் கத்தி ஒன்று, 5 கிலோ வெடி உப்புகள் சா.பொ.1 முதல் சா.பொ.4 ஆக குறியீடு செய்யபப்படுகிறது**. இத்துடன் வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு – 9(B)(1)(a) IE Act ஆக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வாய்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.